Journal of Valartamil
Universiti Pendidikan Sultan Idris
Sultan Idris Education University
eISSN 2821-3157

# உலகமயமாதல் சூழலில் தமிழ் கற்பித்தல் நடைமுறையின் பிரச்சனைகளும் தீர்வுகளும்

# *Problems and Solutions in The Practice of Teaching Tamil in The Context of Globalisation*

**K. Sinduja***

University of Jaffna, Jaffna, Sri Lanka

***Corresponding author email: Sindhujasindu1020@gmail.com**

**ARTICLE HISTORY**
Received: 1st May 2026
Revised: 26th May 2026
Accepted: 19th June 2026
Published: 20th June 2026

**KEYWORDS**
உலகமயமாதல்
தமிழ் கற்பித்தல்
பண்பாட்டுக் கற்கை
நிகழ்நிலை
மொழியியல்

**ஆய்வுச் சுருக்கம் -** இந்த ஆய்வானது பூகோளமயமாதல் பின்புலத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் எவ்வாறு தமிழ் மொழியையும் அதன் வழக்காறுகளையும் பண்பாட்டு அடிப்படைகளையும் பாதிக்கிறது என்பது குறித்தும், அத்தகைய சவால்களிலிருந்து தமிழ் மொழியை கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளின் மூலம் எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்தும், அதற்கான கோட்பாடு மற்றும் நடைமுறை சார்ந்த சிந்தனைகள் குறித்தும் ஆராய்வதாக அமைகிறது. உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தொல்பழம் இனக்குழுக்களுள் ஒன்றாக தமிழ் இனம் விளங்குகிறது. வரலாற்று வளர்ச்சியில் நோக்கும்போது அரசியல், சமூக, பொருளாதார, பண்பாடு மற்றும் கலை-இலக்கிய ரீதியாக வளமான சமூகமாக இருப்பதுடன், அரசற்ற இனம் என்ற துயரத்திற்கும் ஆளாகியுள்ளது. தென்னாசியாவிலேயே மொழியில் தன் அடையாளத்தை நிலைநிறுத்திக்கொண்ட பெருமைக்குரிய மொழியாகவும் தமிழ் விளங்குகிறது. ஆனால் உலகமயமாதல் பின்புலத்தில் நிகழ்நிலைகளின் மாற்றங்கள் அதன் இருப்பு பற்றிய கேள்விகளை உருவாக்கிவிடுகின்றன. மொழியியல் மற்றும் பண்பாட்டுக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் பண்பு சார்ந்த இந்த ஆய்வானது, உலகமயமாதல் காரணமாக தமிழ்மொழி எதிர்நோக்கும் சவால்களை அடையாளம் கண்டு, அவற்றை எதிர்கொள்வதற்கான கோட்பாடு மற்றும் பிரயோக நிலைப்பட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், தமிழ் மொழியும் பண்பாடும் குறித்த தேசிய சிந்தனையை கட்டியெழுப்புவதையும் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

https://doi.org/10.37134/jvt.vol7.1.9.2026
© 2026 Sinduja. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

**ABSTRACT -** This study examines how the changes brought about by globalisation at the worldwide level affect the Tamil language, its customs and cultural foundations; investigates how Tamil can be safeguarded from such challenges through teaching and learning activities; and explores the theoretical and practical thinking necessary to achieve this. The Tamil people constitute one of the ancient ethnic communities dispersed across the world. Viewed through the lens of historical development, Tamils represent a community rich in political, social, economic, cultural, and literary dimensions, yet one that has also endured the sorrow of statelessness, while Tamil stands as a language of distinction that has established its identity through its linguistic heritage in South Asia. However, the transformations arising in the current context of globalisation raise fundamental questions about the very existence of this language and the danger of its losing or being divested of its linguistic identity. The study is grounded in linguistic and cultural theory, and employs a qualitative approach. It aims to identify the challenges faced by Tamil in survival and teaching under conditions of globalisation, to develop theoretical and applied programmes to address those challenges, and to build a national consciousness around the Tamil language and its cultural heritage.

***KEYWORDS:*** *Globalisation, Tamil language teaching, Cultural studies Current context, Linguistics*

## அறிமுகம்

தமிழ் மொழியானது தொன்மையான மொழிகளில் ஒன்றாக இடம்பெறுவதுடன், வாழ்வியலை தொகுத்தளிக்கும் உன்னதமான மொழியாக இன்று வரை தன்னுடைய ஆதிக்கத்தினை நிலைநாட்டி வருகின்றது. இந்த உலகமயமாதல் சூழலில் தமிழ்மொழியைக் கற்பித்தலும் அதில் உள்ள இடர்பாடுகளை சுமூகமாகத் தீர்த்தலும் மிக முக்கியமான தேவையாக இடம்பெறுகிறது. அடிப்படையில் உலகமயமாதல் என்பது தகவல் தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு பரிமாற்ற எல்லைகளைக் கடந்து உலகம் முழுவதையும் ஒரு சிறிய கிராமமாக மாற்றும் ஒரு செயல்முறையாகும். இவ்வாறான சூழலில் உலகில் பல்வேறு மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன; அதிலும் ஆங்கில மொழியின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கின்றது. அதனால் நவீனமயமாக்கப்பட்ட உலகில் தமிழ்மொழியை தக்கவைத்துப் பேணி பாதுகாப்பதும் கற்பிப்பதும் மிகப்பெரிய சவாலாக அமைந்துவிடுகின்றது.

இதன் அடிப்படையில் உலகமயமாதல் சூழலில் தமிழ் மொழியின் தேவை என்ன என்பதையும், உலகளாவிய ரீதியில் தமிழைப் பற்றி எடுத்துக்காட்டுவதையும், தமிழ் மொழிக்கு ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளை அடையாளப்படுத்தி தமிழ்மொழியின் பாரம்பரியத்தை உணர்த்துவதும் இக்கட்டுரையின் சிறு முயற்சியாக அமைகிறது.

## உலகமயமாதல் சூழலில் தமிழ்மொழி கற்பித்தலில் உள்ள பிரச்சினைகள்

உலகமயமாதல் சூழலில் குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் தமிழ்மொழி அழிந்து வருகின்றது. ஆரம்பத்தில் தாய்மொழியான தமிழ்மொழியை ஐயமின்றி தெளிவாகவும் நுணுக்கமாகவும் பேசிய தமிழர்கள், தொழில் நிமித்தமோ, கல்வி நிமித்தமோ, யுத்த காலப்பகுதிகளில் சென்றவர்கள் கூட தங்களுடைய தமிழ்மொழியை கைவிட்டு அந்நிய மொழிக்கு அடிமையாகுதல் ஒரு வகையான இழப்பாக இடம்பெறுகிறது. புலம்பெயர்ந்தோர் பிறமொழியைக் கற்று அதில் தேர்ச்சி

https://doi.org/10.37134/jvt.vol7.1.9.2026
© 2026 Sinduja. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

பெறுதல் காரணமாக தமிழ்மொழி தன்னை வரலாற்றில் இருப்பு கொள்வதிலும் வளர்ச்சியடைவதிலும் தேக்க நிலையை அடைந்து வருகின்றது.

சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் இணையவழி கருவிகளைப் பயன்படுத்தி தமிழைக் கற்பிப்பதற்கான தொழினுட்ப அறிவு போதாமையும், ஆசிரியர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொடர்பான பயிற்சிகள் குறைவாக இருப்பதுவும், சில பாடசாலைகளில் தகவல் தொழினுட்ப வளங்களின் பற்றாக்குறையும் தமிழைக் கற்பிப்பதில் மிகப்பெரிய சவால்களாக உள்ளன. உலகளாவிய ரீதியில் சமூக வலைத்தளங்களின் அதீத ஈடுபாட்டின் விளைவாக புத்தகங்களின் வாசிப்பு மட்டம் குறைவடைந்து வருகின்றமையும், வாசகர் வட்டம் பெருகாமல் இருப்பதும் தமிழுக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய இழப்பாகும்.

தமிழ்மொழியை எல்லோராலும் கற்பிக்க முடியும். ஆனால் உலகமயமாதல் சூழலுக்கேற்ப கணினி வழியாக தமிழைக் கற்பித்தல் மற்றும் பிற நவீன கற்பித்தல் நுட்பங்களை அறிந்த தமிழ் ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவி வருதல் ஆகியன தமிழ்மொழி தன் இடத்தை தக்கவைத்துக்கொள்ள முடியாததற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. இன்றைய உலகமயமாதல் சூழ்நிலையில் சமூக ஊடகங்களின் உச்சகட்ட வளர்ச்சியின் தாக்கத்தால் மாணவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை சமூக வலைத்தளங்களில் நேரத்தை அதிகமாக செலவிடுவதால் தமிழ் வாசிப்பு மற்றும் எழுத்தாற்றல் வீதம் குறைந்து வருகின்றமை தமிழுக்கு ஏற்பட்டு வருகின்ற மிகப்பெரிய சவாலாகும்.

அதுமட்டுமன்றி, ஆசிரியர்களின் கற்பித்தல் முறையில் மொழி உச்சரிப்பு, மொழி கட்டமைப்பு தொடர்பான குறைபாடுகள் உள்ளமையும் தமிழ்மொழிக்கு வந்துள்ள பாரிய சவாலாக பதிவுசெய்யப்படுகின்றது. கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே தமிழ்மொழி தொடர்பான சிறந்த வழிகாட்டுதல்களையும் பின்னூட்டல்களையும் வழங்காததால் தமிழ்மொழியை கற்பதிலும் வாசிப்பதிலும் எழுவாய், பயனிலைகளை ஒழுங்காக கையாளுவதிலும் பல இடர்பாடுகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. இப்பிரச்சினை தமிழைச் சிறுக சிறுக அழியச்செய்யும் ஆபத்து நிறைந்த செயற்பாடாக இடம்பெறுகிறது.

## உலகமயமாதல் சூழலில் தமிழ்மொழி கற்பித்தலின் தேவை

தமிழ் மொழியின் பாரம்பரியத்தையும் செழுமையையும் இளங்கோவடிகளால் வடிக்கப்பட்ட சிலப்பதிகாரக் காப்பியத்திலும், கம்பனால் காவியமான இராமாயணத்திலும், நவீனக் கவிதைக்கு வித்திட்ட பாரதியாரின் எளிய பதம் எளிய நடை இனிய சந்தம் கொண்டு அமைக்கப்பட்ட கவிதைகளிலும் அவதானிக்க முடிகின்றது.

*செந்தமிழே! உயிரே! நறுந்தேனே செயலினை மூச்சினை உனக்களித்தேனே!*

என்ற பாரதிதாசனின் தமிழ்திறத்தையும் தமிழ் மீது கொண்ட தீவிர காதலையும் நவீனக் காலத்திலும் பார்க்கக்கூடியதாக அமைகிறது. இதனை அடியோற்றியே விருட்சமாய் சுடர்விடும் மொழியான தமிழ் பண்பாட்டையும் பாரம்பரியத்தின் தொடர்ச்சியான இருப்பையும் கொண்டிருந்தாலும், உலகமயமாதல் சூழலில் நவீன தொழினுட்பங்களின் உச்சக்கட்ட வளர்ச்சியின் காரணமாக தன்னுடைய இருப்பு நிலையினை தக்கவைத்துக்கொள்வதில் பல சிக்கல்களை சந்தித்து வருகின்றது.

https://doi.org/10.37134/jvt.vol7.1.9.2026
© 2026 Sinduja. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

உலகமயமாதல் காலத்தில் தமிழ் கற்பித்தல் என்பது வெறும் மொழியைப் பேசுவதும் புதியச் சொற்களை உருவாக்குவதிலும் மட்டுமல்ல. அது தமிழரின் தொல்சீர் அடையாளத்தை, வரலாற்றைப் பாதுகாப்பதற்கான பிரதான நுழைவாயிலாகும். மொழியானது ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக இனங்காணப்படுகின்றது. உலகமயமாதலினால் ஏற்பட்டு வரும் மேற்கத்திய கலாச்சார ஆதிக்கத்திலிருந்து தமிழ்ப் பண்பாட்டை பாதுகாக்க தமிழ்மொழி கல்வி மிக முக்கியமானது. அடிப்படையில் தமிழ்மொழியைக் கற்பித்தல் வெறுமனே ஏடுகளை புரட்டுவது அல்ல; பழந்தமிழரின் வாழ்வியலை தொகுத்தளிக்கக்கூடிய, எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கக்கூடிய தமிழர்களின் வரப்பிரசாதமாகும்.

இன்றைய தலைமுறையினர் பக்தி, ஒழுக்கம், அறம், நீதி, துறவறம், இல்லறம் இவற்றைப் புரிந்துகொள்ள பண்டைய இலக்கியங்களான திருக்குறள், கம்பராமாயணம், பெரியபுராணம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களை நுணுக்கமாகவும் தெளிவாகவும் கற்றுணர்தல் மூலமே தமிழ்மொழியின் அத்தியாவசியத்தை விளங்கிக்கொள்ள முடிகின்றது. தகவல் தொழில்நுட்பம் ஆங்கில மொழியைப் பிரதானமாகக் கொண்டு இயங்கும் காலக்கட்டத்தில், இணையம் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில்நுட்பங்கள் வழியாக தமிழ்மொழியை கையாளுதல், பயன்படுத்துதல் மற்றும் தகவல்களை டிஜிட்டல் மயமாக்குவது உலகளாவிய ரீதியில் தமிழை வளர்க்க உதவும் சிறந்த உத்திமுறையாகும்.

பன்மொழிகளை கற்றுக்கொள்வதால் எந்த நாட்டிற்கு நாம் சென்றாலும் தமிழ்மொழியை, அதன் பாரம்பரிய சிறப்பை, பழந்தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் வீரத்தையும் பண்பாட்டையும் கற்பிப்பதால் அன்னியநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் தமிழ் ஒரு பாடத்துறையாக கற்பிக்கக்கூடிய வாய்ப்பு உருவாகுவதோடு, மாணவர்கள் தமிழ்மொழியில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் சந்தர்ப்பம் அமைகிறது. தமிழ் இலக்கியங்களை பிறமொழியில் மொழிபெயர்க்கும்போது தமிழினுடைய உன்னதமும் வளர்ச்சியும் தழைத்தோங்கி நிற்பதை அறிய முடிகிறது என்பது முக்கியமான அம்சமாகும்.

**உலகமயமாதல் சூழலில் தமிழ்மொழியை வளர்த்தெடுப்பதற்கான நடவடிக்கைகளும் தீர்வுகளும்**

உலகமயமாதல் சூழல் என்பது பெரிய உலகம் தொழில்நுட்ப வளர்ச்சியால் சிறிய கிராமமாக மாறுதலாகும். உலகம் மாறும்போது அதற்கேற்ப மனிதனும் தன்னை தகவமைத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். உலகமயமாதலுக்கேற்ப தமிழ்மொழியை செயற்கை நுண்ணறிவு, செயலிகள் மற்றும் இணையவழி கற்றல் தளங்களைப் பயன்படுத்தி சுவாரசியமாக கற்பிக்க ஆசிரியர்கள் முதலில் இணையவழிக் கல்வி குறித்த அறிவைப் பெற்றிருத்தல் முதன்மையானது. இதற்கு பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வியற் கல்லூரிகள் தகவல் தொடர்பாடல் தொடர்பான கற்றலை ஒரு பாடமாக கற்பிப்பதன் மூலம் எதிர்காலத்தில் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிறப்பான முறையில் தொழினுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி கற்பிப்பதற்கான சந்தர்ப்பம் அமையும்போது தமிழ்மொழியை மேலும் வளர்த்தெடுக்க முடியும்.

நவீனமயமாக்கல் முறைகளுக்கேற்ப அறிவுசார் வகுப்பறைகளை (Smart Classrooms) தயார்படுத்தும்போது மாணவர்கள் விரும்பத்தக்க வகையில் வகுப்பறைகளில் கணினிமயப்படுத்தல் வகையில் புதிய திட்டங்களையும் அணுகுமுறைகளையும் நடைமுறைப்படுத்தி மாணவர்களுக்கு தமிழைக் கற்க ஆர்வத்தை தூண்டுவதன் மூலம் தமிழ்மொழி எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நீங்க முடியும். பட்டதாரிகள் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு நவீன இணையவழி உத்திகள், டிஜிட்டல் கருவிகள்,

https://doi.org/10.37134/jvt.vol7.1.9.2026
© 2026 Sinduja. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

பன்முக இணையத்தள பயிற்சிகள் வழங்குவதும் தமிழ்மொழியை வளர்த்தெடுப்பதற்கான சிறந்த வழியாகும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்கு இணையம் வழியாக தமிழ் கற்பிக்க முறையான பாடத்திட்டங்களும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் படிப்புகளும் உருவாக்கப்படுவது தமிழ்மொழியை வளர்ப்பதில் முதன்மையான கொள்கைகளாக இடம்பெறுகின்றன. தமிழைச் சிறப்புப் பாடமாகவும் முக்கிய பாடமாகவும் கற்கும் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான மாணவர்களுக்கு மொழியின் அடிப்படை, மொழிக் கூறுகள், தமிழ்மொழியின் கட்டமைப்பு, எழுத்துக்களின் உச்சரிப்பு தொடர்பான பின்னூட்டல்களை வழங்குதல் தமிழ்மொழியை வளர்த்தெடுப்பதற்கான சிறந்த திட்டமாகும்.

பாடசாலைகளில் தமிழ் திண்டிப் போட்டிகள், தமிழ் பொது அறிவு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதும், பல்கலைக்கழகங்களில் தமிழியல் மாநாடுகள் மற்றும் தமிழ் தொடர்பான கழகங்களை அமைத்து அனைத்து மாணவர்களையும் பங்குபற்ற வைத்து திறமையான மாணவர்களை இனங்காணுவதும் தமிழை தழைத்தோங்க வழிசமைக்கும். உலகளாவிய ரீதியில் தமிழியல் மாநாடுகள் ஈழம், மலேசியா, சிங்கப்பூர், கனடா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இன்றளவிலும் பெரிய அளவில் மேற்கொண்டு வருகின்றமையும், கல்வியாளர்கள் பலர் மாநாடுகளுக்கு ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வெளிநாட்டு மாநாடுகளில் தமிழை வளர்த்தெடுக்கும் சந்தர்ப்பம் அதிகமாக நிலவிவருவதும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கான மாபெரும் உந்துசக்தியாக அமைகின்றது.

இன்றைய உலகமயமாதலுக்கேற்ப எந்த நாட்டில் இருந்தாலும் தமிழ் ஆர்வலர்கள் பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் தொடக்கம் நவீன இலக்கியங்கள் வரை பதிவிறக்கம் செய்யக்கூடிய இணையத்தள வசதிகள் வளர்ச்சியடைந்து வருவது தமிழ்மொழியின் இருப்பையும் தமிழர்களின் வரலாற்றையும் அடையாளத்தையும் வாழ்வியல் கூறுகளையும் நிலைநிறுத்திக்கொண்டு வருகின்றது. ஈழத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்பவர்களும் புலம்பெயர்ந்து சென்றவர்களும் கூட நாவல், சிறுகதை, மரபுக்கவிதை முதல் நவீன கவிதை வரையில் தங்களுடைய எழுத்தாற்றல் பணியை மேற்கொண்டு நூல் வெளியீடுகளை நடத்தி வருகின்றனர். இது உலகளாவிய ரீதியில் தமிழ்மொழி வளர்ந்து வருவதற்கான முக்கிய காரணமாகவும் அமைகிறது.

*தமிழுக்கு நிலவென்று பேர் — இன்ப தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்*
என்ற பாரதியாரின் கூற்றுக்கிணங்க, தமிழ்மொழி வளர்ச்சியடைந்து வருவதற்கு தமிழ்மொழியுடன் தொழில்நுட்பமும் கைகோர்க்கும்போது தமிழ்மொழி உலக அரங்கத்தில் தனது சிறப்பை தொடர்ந்து நிலைநாட்டும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

**முடிவுரை**

முன்னைப் பழம்பொருளுக்கு முன்னைப் பழமாகவும் பின்னைப் புதுமைக்கு புதுமை பொருளாகவும் அமைந்துவிட்ட தாய்மொழியான தமிழ்மொழியானது நாவிற்கு இனிமையூட்டுவதாகவும் கேட்போர் செவிக்கு இனிமையை சேர்ப்பதாகவும் விளங்குகிறது. கீர்த்தி என்னும் முத்துமாலையை அணிந்துக்கொண்டிருக்கும் தமிழ்மொழியானது தமிழர்களிடையே பாரம்பரிய வரலாற்றை நிலைநிறுத்தக்கூடிய வகையிலான இனிமை மிக்க மொழியாகும். தமிழ் மொழி காலம்தோறும் அழியாமல் பாதுகாப்பதும், உலகமயமாதல் சூழலுக்கேற்ப தமிழை உயிரினும் மேலானதாக போற்றுவதும் பாதுகாப்பதும் தமிழரின் முக்கிய கடமையாகும்.

https://doi.org/10.37134/jvt.vol7.1.9.2026
© 2026 Sinduja. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license

இந்த ஆய்வின் வழியாக தமிழ்மொழியைப் பாதுகாப்பது தொடர்பான கருத்துக்கள் முழுமையாக பதிவாகி இருக்கின்றன என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது; இது முடிந்த முடிவும் இல்லை. மொழியியல் மற்றும் பண்பாட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் அணுகி மீள்கட்டமைத்து, மீள்வாசித்து, மீள்கட்டுவதன் மூலம் தமிழ்மொழியின் முழுமையை நோக்கி மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு துறை சார்ந்த ஆய்வுகளில் ஒரு பகுதியை இந்த ஆய்வு நிறைவு செய்கின்றது.

**தொகுப்புரை**

தமிழ் மொழி என்பது திராவிட குடும்ப மொழிகளில் ஒன்றாகும். தமிழ்மொழி தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை உலகளாவிய ரீதியில் தனக்கான இருப்பையும் அடையாளத்தையும் பேணி பாதுகாத்து வருகின்றது. இன்றைய உலகமயமாதல் சூழலில் தமிழ்மொழி தங்குதடையின்றி வளர்ச்சியடைந்து வருவதற்கு தொழினுட்பங்களின் பங்களிப்பும் தமிழர்களின் படைப்பாளுமையின் ஆர்வமும் முதன்மை ஊடகங்களாக தொழிற்படுகின்றன என்ற அடிப்படையில், காலத்திற்கு ஏற்ப தமிழ்மொழி தன்னை தகவமைத்துக்கொண்டு வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதை உடன் நிகழ்காலத்திற்கு இணக்கப்படுத்திப் பார்க்க வேண்டியுள்ளது என்ற அருட்டுணர்வே இந்த ஆய்வை மேற்கொள்வதற்கான அடிப்படையாகும்.

**REFERENCES**

இராஜேந்திரன், என். எஸ். (2012). தமிழ் கற்றல் கற்பித்தலில் சவால்களும் பரிந்துரைகளும். தமிழாராட்சி மாநாடு.
கருணாகரன், கி., & ஜெயா, வ. (1990). இக்கால மொழியியல் அறிமுகம். கோவை: கதிர் பதிப்பகம்.
தேவநேய பாவணர். (1969). தமிழ்மொழி வரலாறு. சென்னை: நேசமணி பதிப்பகம்.
நுஃமான், எம். ஏ. (1984). பாரதியின் மொழி சிந்தனைகள்: ஒரு மொழியியல் நோக்கு. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப்பீடம்.
நுஃமான், எம். ஏ. (2003). வகுப்புகளில் தமிழ்மொழிக் கற்பித்தல். கொழும்பு: கல்வி வெளியீட்டு திணைக்களம்.
பாலசுப்ரமணியம் பிள்ளை. (1983). மொழியியல். சென்னை: நறுமலர் பதிப்பகம்.
வரதராசன், மு. (1954). மொழி வரலாறு மற்றும் மொழியியல். திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்.

https://doi.org/10.37134/jvt.vol7.1.9.2026
© 2026 Sinduja. Published by Pejabat Karang Mengarang (UPSI Press).
This is an open access article under the CC BY-NC 4.0 license